# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No. 468 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 2 | நாள் | : | 24.07.2025 |
| பெயர் | : | சம்சுதீன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 24th day of July 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது கடையநல்லூர் காவல்நிலையத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 13.01.2020 ம் தேதி மாலை 4.30 மணியளவில் உதவி ஆய்வாளர் மாதவன்தலைமையில் நானும், தலைமைக் காவலர் மாரியப்பன் , ஜசக்ராஜா, காவலர் ரமேஷ், கார்த்திக் ஆகியோருடன் உதவி ஆய்வாளர் மாதவனுக்கு கிடைத்த தகவலின்படி தென்காசி டூ ஆய்க்குடி சாலையில் வாகினி தியேட்டர் வழியே சென்றபோது தென்காசி டூ ஆய்குடி ரோட்டில் ரயில்வே வடபுறம் உள்ள ஆறுமுகம் முதலியார் சண்முகம் மகன் என்பவரது பாழடைந்த கட்டிடத்தின் உள்ளே சென்று பார்க்கும்போது மேசாக் என்பவர் அவரது அமீன் காஜாமைதீன் அவர் சொல்லக்கூடிய திட்டத்தை நாம் அனைவரும் செய்யவேண்டும் என்று கூறும்போது கரீம் நவாஸ் அல் தபீப், முகமது சக்கரியா மற்றும் அப்துல் ரகுமான் 5 பேரும் அமீர் காஜா முகைதீன் கூறியது போல் இந்திய இறையாண்மைக்கும், தேசிய ஒற்றுமைக்கும் எதிராக பொதுமக்களுக்கு சேதம் ஏற்படுத்தவேண்டும் என்றும், தற்சமயம் அமீர், காஜா

மைதீன் அவருடைய காவல் துறையினர் கைது செய்ததால் கன்னியாகுமரி மாவட்டத்தில் களியாக்காவிளை செக் போஸ்ட்டில் சிறப்பு உதவி ஆய்வாளர் வில்சன் அவர்களை சுட்டுக்கொன்றது போல் நாமும் திருநெல்வேலி, தென்காசி மாவட்டத்தில் ஏதாவது ஒரு பெரிய அசாம்பாவிதத்தை செய்யவேண்டும் என்பதை கூறியதை இந்த 4 பேரும் சேர்ந்து உரத்த குரலில் செய்வோம் என்று அந்த சமயம் நாங்கள் அவர்களை பிடிக்க முயற்சி செய்தபோது தப்பியோடியவர்களை மணிகண்டன் மற்றும் கண்ணன் ஆகியோர்கள் உதவியுடன் பிடித்தபோது அல் கபீப், என்பவருக்கு முட்கள் கீறியதில் நெற்றியில் காயம் ஏற்பட்டது. கரீப் நவாஸ் என்பவருக்கு வலது கால் தொடையில் காயம் ஏற்பட்டது. அப்போது அந்த வழியாக வந்த ஆட்டோவில் அவருடன் 3 காவலர்களை ஏற்றி காவல் நிலையம் கொண்டுவந்து உதவி ஆய்வாளர் மாதவன் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள். மற்றும் தென்காசி உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளரும் விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

கடந்த 13.01.2020 ம்தேதிக்கு முன்பு 2018 முதல் தென்காசி காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். நான் கூறிய அனைத்தையும் அவர் பதிவு செய்தார். எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் சென்றதாக பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள்ரோந்து கிளம்பி சென்றோம். வழக்கம் போல மாலை 4.00 மணிக்கு ரோந்துக்கு புறப்பட்டு செல்வோம். அவ்வாறு ரோந்து புறப்பட்டுச்சென்ற நிலையில் உதவி ஆய்வாளர்அவருக்கு ரகசிய தகவல் கிடைத்தாக கூறி என்னை ஆய்குடி சாலைக்கு செல்வோம் என்று அழைத்தார். எங்களுடைய ரோந்து பணி அன்றைய தினப்படி திட்டமிட்ட ரோந்து பணியாகும். நாங்கள் வழக்கமாக ஆறு நபர்கள் செல்வோமா என்றால் 6 முதல் 8 அல்லது நபர்களாக செல்வோம். பிரிந்து செல்வோம். நாங்கள் அன்றைய தினம் காவல் நிலையத்திலிருந்து ரோந்துக்கு சென்றோம். அவ்வாறு புறப்பட்டு செல்லும்போது நிலைய நாட்குறிப்பில் பதிவு செய்யப்படும். எங்கள் காவல்

நிலையத்தில் மொத்தம் 68 நபர்கள் பணிபுரிந்தோம். தென்காசி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் 3 பீட்கள் உள்ளது. ஒவ்வொரு பீட்டுக்கும் ஒரு காவலர் அல்லது 2 காவலர்கள் பொறுப்பாளர்களாவர்கள். பீட்டுக்குரிய காவலரை அன்றைய தினம் காலையில் முடிவு செய்வார்கள். நாங்கள் சோதனைக்கு சென்ற பகுதி 1வதுபீட்டுக்குரிய பகுதியாகும் அதற்குரிய காவலர் யார் என்பது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எங்களுக்கு காலையில் ரோல்கான் நடைபெறும் அதன் அலுவலர் உதவியாளர் ஆவார். காலை 7.00 மணிக்கு ரோல் கான் நடைபெறும். காலையிலேயே என்னென்ன பணியை யார் செய்யவேண்டும் என்று முடிவு செய்யப்படும். மாலையில் தேவை ஏற்பட்டால் அதை மாற்றுவார்கள். ஒவ்வொரு காவலருக்கும் பாக்கெட் நோட் புத்தகம் உண்டு. தற்போதும் என் வசம் பாக்கெட் நோட் புத்தகம்இருக்கிறது. நான் அன்றைய தினம் மேற்கொண்ட பணிகள் குறித்து பாக்கெட் நோட் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளேன். பாக்கெட் நோட் புத்தகத்தில் உதவி ஆய்வாளர் இரவப்பணியில் இருந்தால் சோதனை செய்வார் அல்லது மறுநாள் ரோல்கானின் போது சோதனை செய்வார். அன்றைய தினம் எனது பாக்கெட் நோட் புத்தகத்தில் உதவி ஆய்வாளர் கையெழுத்து செய்தாரா என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த புத்தகத்தை ஆஜர் படுத்தினால் உண்மை தெரியும் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் பொது நாட்குறிப்பு உண்டு. அந்த நாட்குறிப்பை உதவி ஆய்வாளரும், எழுத்தரும் பராமரிப்பார்கள். அந்த நாட்குறிப்பில் யார், யார் என்னென்ன பணிக்கு நியமிக்கப்பட்டனர், எப்போது புறப்பட்டனர் எப்போது வந்தனர் என்று எழுதப்படும் என்றால் சரிதான். அன்றைய தினம் நிலைய எழுத்தரும், உதவி ஆய்வாளரும் எழுதியிருக்கலாம். 08.02.2020 ம் தேதி காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். என்னை அறிவிப்பு கொடுத்து அழைத்து விசாரிக்கவில்லை. நான் ஆய்வாளரிடம்கொடுத்த வாக்குமூல சங்கதிகளை மாற்றி கூறவேண்டும் என்பதற்காக காவல் துணைகண்காணிப்பாளரிடம் மாற்று வாக்குமூலம் கொடுத்தேன்என்றால் சரியல்ல. எதிரிகள் தென்காசி மற்றும் திருநெல்வேலி

பகுதியில் தீவிரவாத செயல்களை செய்யவேண்டும் என்று சதித்தீட்டம் தீட்டியதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னிடம் அதுபோன்ற சதிச்செயல்களில் ஈடுபடப் போவதாக வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. திருநெல்வேலி, மேலப்பாளையம், காயல்பட்டிணம், பெங்களூர் ஆகிய பகுதிகளில் தீவிரவாத செயல்களை நடத்தப்போவதாக திட்டமிட்டன என என்னிடம்எதிரிகள் ஏதும் கூறவில்லை. என் முன்பாக உதவி ஆய்வாளரிடம் கூறினார்கள். சம்பவ இடத்தில் தகவல்சொன்னார்கள். காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபோது வாக்குமூலம் கொடுத்தார்கள். மேற்கண்ட விவரங்களை நான் ஆய்வாளரிடமும்,, காவல் துணைக்கண்காணிப்பாளரிடமும் கொடுத்த வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் தான் முதலில் அந்த இடத்திற்குள் நுழைந்தார். வாசல்பகுதியில் இருந்தோம். அந்த அறையில் எத்தனை சன்னல்கள் உள்ளது என்பது தற்போது ஞாபகமில்லை. நான்சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் ரோந்து சென்றதாக கூறுவதும், மறைவிடத்தில் உதவி ஆய்வாளர் மற்றும் நாங்கள் எதிரிகளை பார்த்தாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் இருசக்கர வாகனங்களில் சென்றோம். எங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோம். காவல்நிலையத்திற்கு சொந்தமான வாகனங்கள் இரண்டு இருசக்கர வாகனங்கள் உள்ளது. நான் அன்றைய தினம் சென்றது எனது சொந்த வாகனம் ஆகும், அதற்கு எனது சொந்த செலவில்தான் பெட்ரோல் போடுவோம். நான் அவ்வாறு கூறுவது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் காவல்நிலையத்திற்கு மாலை 5.30 மணிக்கு வந்தோம். ஆய்வாளர் அப்போது நிலையத்தில் இல்லை. ஆய்வாளர் மாலை 6.00 மணிக்கு வந்தார். ஆய்வாளர் எதிரிகளை விசாரணை செய்தார். நான் அவர்களை விசாரித்தபோது வேறு வேலையில் இருந்தேன். எதிரிகளை காவல்நிலையத்திற்கு கொண்டு வந்துவிட்டு நாங்கள் மற்ற பணிகளில் ஈடுபட்டோம். நாங்கள் காவல்நிலையத்தில் இருந்து புறப்பட்டு செல்லும்போது ஒவ்வொரு வரும் அவர்களுக்கிட்ட பணியில் இருந்து பிரிந்து செல்லவில்லை சேர்ந்துதான்

புறப்பட்டோம். நான் சொன்ன நாள், சொன்ன தேதியில் சம்பவ இடத்திற்கு நாங்கள் அனைவரும் சென்றதாக கூறுவதும், காஜாமுகைதீன் என்பவருக்கு ஆதரவாக எதிரிகள் பேசியதாக கூறுவதும், எதிரிகள் சதி செயல்களில் ஈடபட திட்டமிட்டதாக கூறுவதும், இந்திய இறையாண்மைக்கு எதிராக செயல்ப்பட்டதாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலோ, ஆய்வாளர் வாக்குமூலத்திலோ, கண்ணன், மணிகண்டன் இருந்ததாக கூறவில்லை என்றால் சரிதான். வழககை ஒவ்வொரு முறையும் அபிவிருத்தி செய்து, மறு வாக்குமூலம் என்ற பெயரில் பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கண்ணன், மணிகண்டன் ஆகியோர் பெயரில் புதிதாக சேர்ப்பதற்காகவே மறு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கைது செய்யப்படும் நபர் காயம்பட்டால் அவருககு உடனடியாக மருத்துவசிகிச்சை அளிக்கப்படும என்றால் சரிதான். அதன் பின்னர்தான் நிலையம் கொண்டுவருவோம் என்றால் சரியல்ல. நிலைய ஆவணங்களில் பதிவு செய்த பின்னர்தான் மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பி வைப்போம். எதிரிகளை நாங்கள் கைது செய்ததாக கூறப்படும் 13.01.2020 ம் தேதிக்கு இரண்டு தினங்கள் முன்பாகவே சட்ட விரோதமாகவே தடுத்து வைத்து, அடித்து சித்ரவதை செய்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு ஏற்பட்டதாக கூறும்காயம் எங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எதிரிகளுக்கு காயம் ஏற்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் எதிரிகளுக்கு காயம் ஏற்பட்டு இருந்தால், எங்களுக்கும் முட்புதரில் நுழைந்து சென்றதால் காயம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் உதவி ஆய்வாளர் வில்சன் என்பவருக்கு ஏற்பட்ட சம்பவத்தால் எங்கள் காவல் நிலைய எல்கையிலும், தமிழ்நாட்டில் மற்ற இடங்களில் பதிவு செய்ய வேண்டும் அழுத்தம் காரணமாக திட்டமிட்டு போடப்பட்ட வழக்கு என்றால்ச ரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல

3, 4, 6 எதிரிகளுக்கு எங்கள் காவல்நிலையத்தில் முன் வழக்கு ஏதும் உள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. முதல் தகவல் அறிக்கையில் 6 வது எதிரி பற்றி கூறப்படவில்லை என்றால் சரிதான். ரகசிய தகவல் எந்த முறையில் கிடைத்தது என்று எனக்கு தெரியாது. சம்பவத்தினத்திற்கு முதல்நாளும் ரோந்து பணியில் ஈடுபட்டோம். நாங்கள் நேரடியாக சம்பவ இடத்திற்கு சென்றோம். வேறு எந்த இடத்திற்கும் செல்லவில்லை. ரோல்கால் நடக்கும் போதே யார், யாருக்கு என்ன, என்ன பணி என்று ஒதுக்கப்பட்டு அது பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படும். சம்பவ இடத்திலேயே எதிரிகளை பிடித்து திரேக பரிசோதனை செய்தோம். காவல்நிலைய விதி 674 ன் படி படிவம் 92 தயாரிக்க வேண்டும் என்றால் சரிதான், நிலையத்தில் வைத்துதான் எழுதுவோம். சம்பவ இடத்தின் சுற்றுபுற இடத்தினை பார்வையிட்டு அந்த விபரங்களை குறிப்பிட்டு எழுத வேண்டும் என்பது காவல்நிலைய விதி 672 ன் படியான நடைமுறை என்றால் சரிதான். அதை புலனாய்வு அலுவலர்தான் மேற்கொள்வார். 3, 4 எதிரிகள் அவர்களின் பெயர், விலாசம் அவர்களே கூறினார்கள். கண்ணன், மணிகண்டன் ஆகியோர்கள் அந்த வழியாக நடந்து வந்தார்கள். அல்கபிருக்கு நெற்றியில் ஏற்பட்ட காயம் வலது நெற்றியா, இடது நெற்றியா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் ரோந்து செல்வது கூறுவது பொய் என்ற சரியல்ல. தமிழ்நாட்டில் ஏதேனும் ஒரு பகுதியில் ஒரு அசாம்பவிதம் நடந்தால், உயர் அதிகாரிகளின் அழுத்ததில் போடப்படும் பொய் வழக்குகளில் இதுவும் ஒன்று என்றால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் வீரவநல்லூர் காவல் நிலையத்தில் முன்னதாக பணிபுரிந்தேன். நான் தென்காசி காவல் நிலையத்தில் ஆய்வாளர் எழுத்தராக இருந்தேன் என்றால் சரிதான். தினமும் ஒதுக்கப்படும் பணிகளை மேற்கொள்வோம். தென்காசி காவல் எல்கை அதிக மக்கள் தொகை கொண்ட காவல்நிலைய எல்கை என்றால் சரிதான். தென்காசி காவல் ஆய்வாளர் அலுவலகத்திற்கு வரும் கடிதங்கள் , புகார் மனுக்கள் ,

முதலமைச்சர் தனிப்பிரிவில் வரும் மனுக்கள், காவல் கண்காணிப்பில் இருந்து வரும் மனுக்கள் முதலில் என்னுடைய பரிசீலனைக்கு வந்து, ஆய்வாளர் பார்வைக்கு செல்லும் என்றால் சரிதான். நான் இவ்வழக்கிற்கு முன்னதாகவும், இவ்வழக்கிற்கு பின்னதாகவும் தென்காசி காவல்நிலையத்தில் பணிபுரிநத்போது ரோந்திற்கு சென்று, அதன் அடிப்படையில் ஏதேனும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் சென்றுள்ளேன், அதனடிப்படையில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் அவ்வாறு ரோந்துசென்றபோது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் குற்ற எண் ஞாபகம் இல்லை, எத்தனை வழக்குகள் என்றும் ஞாபகம் இல்லை. பொதுவாகவே ஆய்வாளர் அலுவலக எழுத்தர் காலை முதல் இரவு வரை அலுவலக பணியில் மட்டுமே போதுமான நேரம் இருக்கும் என்றும், வேறு பணி ஒதுக்கப்படுவது இல்லை என்றால் சரியல்ல. புகார் கொடுகக வரும் நபர்கள் எழுத தெரியாதவர்களாக இருந்தால், அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்வோம், அதை படித்து காண்பித்து கையொப்பம் பெறுவோம். அவ்வாறு படித்து காண்பித்தோம் என்பதையும் மனுவில் குறிப்பிடுவோம். இவ்வழக்கிற்கு பின்னர் எதிரிகள் குடும்பத்தினர் உயர் நீதிமன்றத்திற்கும், காவல் கண்காணிப்பாளருக்கும், மனித உரிமைகள் ஆணையத்திற்கும் புகார் மனுக்கள் அனு ப்பி அது விசாரணைக்கு வரும்போது அதை நான்தான் கையாண்டு விசாரணை மேற்கொள்வேன் என்றால் சரியல்ல, ஆய்வாளர் பார்வைக்கு வைப்பேன். மனுவை ஆய்வாளர் பார்வைக்கு வைக்கும்போது அதில் குறிப்பும் ஏதும் எழுதுவது இல்லை. ஆய்வாளர் விசாரணனையில் எனகது இரகசிய தகவல் கிடைத்தாகவும், துணை கண்காணிப்பாளர் விசாரணையில் உதவி ஆய்வாளகுக்கு தகவல் கிடைத்தாகவும் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் இருநது ஆய்க்குடி சாலைக்கு செல்ல மூன்று வழிகள் உள்ளது. நாங்கள் நிலையத்தில் இருந்து புறப்பட்டு கோவில்வாசலுக்கு வந்த பின்னர் தகவல் வந்தது. தகவல் வந்த நேரம் குறிப்பாக ஞாபகம் இல்லை. எனது வாகனத்தில் மாரியப்பன் பின்னால் அமர்ந்து வந்தார், நான்தான் வாகனத்தினை ஓட்டினேன்.

ஆய்க்குடி சாலையில் உள்ள சம்பவ இடத்திற்கு நாங்கள் ஆறு பேரும் ஒரே நேரத்தில் சென்றோம். எதிரிகள் பேசுவது இந்திய இறையாண்மைக்கும், தேசிய ஒற்றுமைக்கும் எதிரானது என்று அதே இடத்தில் நாங்கள் முடிவு செய்தோம். அதை ஆய்வாளரிடமும், காவல் கண்காணிப்பாளரிமும் கூறினேன். நான் மறுவிசாரணையில்தான் அவ்வாறு கூறினேன் என்றால் சரியல்ல. என்னை முதலாவதாக விசாரித்தபோதே நான் அவ்வாறு கூறினேன். நாங்கள் உள்ளே நுழைந்த போது 5 நபர்களும்வெளியே ஓடினார்கள், அதில்இரண்டு நபர்கள் அங்கிருந்து தப்பி ஓடினார்கள். நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்று தகவலை ஒட்டுக்கேட்டு, பின்னர் அவர்களை மடக்கி பிடித்து, தப்பி ஓடியவர்களை விரட்டிசென்று கொண்டு வர சுமார் 1 மணிநேரத்திற்கு மேலானது என்றால் சரியல்ல. எதிரிகள் கூறிய பெயர், முகவரியை எங்கள் பாக்கெட் நோட்டு புத்தகத்தில் குறித்து கொண்டோம் என்றால் குறித்துக் கொண்டோம். நான் காஜா மைதீன் என்பவரை நான் பார்த்தது இல்லை, அவருக்கு ஆதரவாகதாக எதிரிகள் பேசினார்கள் என்று கூறியுள்ளேன். ஒருவர் பேச மற்றவர்கள் அமர்ந்து இருந்தார்கள் என்பதை உதவி ஆய்வாளர்தான் பார்த்தார், நாங்கள் சத்தத்தை மட்டும்தான் கேட்டோம். நாங்கள் எதிரிகள் அனைவரையும் ஒரே ஆட்டோவில் நிலையம்கொண்டு வந்தோம். பின்னர் நிலையத்தில் உள்ள பதிவேடுகளில் பதிவு செய்த பின்னர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். நான் வேறு பணியில் இருந்தேன். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. எங்கள் காவல் நிலையம் புதிய கட்டிடத்தில் இயங்க தொடங்கிய பின்னர் கண்காணிப்பு கேமரா இருந்து வருகிறது. நான் எந்த ரோந்து பணியிலும் ஈடபடபவில்லை என்றும், உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்கு ஏற்ப பொய் சாட்சியம் அளிக்கிறேன்எ னற்ால்ச ரியல்ல. ஆய்வாளர் விசாரணையிலும் மற்றும் துணைக்கண்காணிப்பாளர் விசாரணையிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் குறிப்பிட்ட சமுதாயத்தினரை சார்ந்தவர் என்பதாலேயே அவர்கள் மீது வழக்கு போட வேண்டும்

என்பதற்காகவும், காவல் உதவி ஆய்வாளர் கன்னியாகுமரி மாவட்டத்தில் கொலைச் செய்யப்பட்டார் என்பதற்காகவும், எதிரிகளை முன்னதாகவே எங்கள் காவல்நிலையத்தில் சட்டவிரோதமாக தடுத்து வைத்து, துன்புறுத்தி போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.24 17:43:06 +0530